# பாபத்தின் சின்னம்




ணி பிரசுரம், சென்னை.

694
696/1-56
O-,2NRM5
N56
112151

# பாபத்தின் சின்னம்

(நாடகம்)

ஆக்கியோன்:

கே. ஆர். ராம்சிங்

(நடிகன்)

ரோகிணி பிரசுரம்,
4, வேலாயுத ராஜா லெயின்
ராபர்ட்சன்பேட்,
சென்னை-28.

விலை 12 அணா

காலஞ் சென்ற இந்திய குணசித்திர நடிகர் திரு. சந்திரமோகன் அவர்கள் பாதங்களில் சமர்ப்பணம்.

இந்த நாடகத்தை நடிக்கவிரும்பும் அன்பர்கள் ஆக்கியோன் அனுமதிபெற வேண்டப்படுகிறுர்கள்.

0-, ANRM5, P
N56

# நன்றி

இந்த நாடகநூல் வெளிவர பலவழிகளில் பேருதவி புரிந்து என் வாழ்வு தாழ்வுகளில் சமஉரிமை கொண்டு எனக்கு ஆதரவு கொடுத்து வரும் "தனக்கென வாழா" தன்மை படைத்த என் உயிர் நண்பர் ஓவியக்கலை அறிஞர் (ART DIRECTOR) உயர்திரு S. அம்மையப்பன் அவர்களுக்கு என் இதய பூர்வ நன்றி.

எனக்கு துணை நின்று உதவிய கலையுள்ளம் கொண்ட பல் டாக்டர் M. பத்மனாபன், L.D.S., S.M.F. (CAL.) (64, லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர்) அவர்களுக்கும் என் இதய நன்றி.

**கே. ஆர். ராம்சிங்.**

# அறிமுகம்

---

**ஜீவகன் :** மங்களபுரி மன்னன். தெய்வம் தங்கும் திருக் கோயிலை காட்சி மண்டப கலைக்கோயிலாக மாற்றியவன்.

**இராகுலன் :** அரசகுரு. வேதங்களின் பெயரால் எதையும் செய்யத் தயங்காதவன். மனித உருவிலே மிருக உள்ளம் படைத்தவன்.

**சந்திரன் :** அரசகுருவின் சீடன். குரு பக்தியில் போதைக்கொண்டு தன் வாழ்க்கையையே பாழாக்கிக் கொள்ள முயன்றவன்.

**மகேந்திரன் :** தன் சதி திட்டத்தை செயலில் காண இராகுலன் கருவியாக அமைத்துக்கொண்ட மங்களபுரி சேனாதிபதி. மன்னன் மைத் துனன்.

**விக்ரமன் :** துணை சேனாதிபதி.

**நிர்மலா :** மங்களபுரி அரசி. குருவின் போதனையால் அரசனையே எதிர்க்கிறாள். ஆனால் காலத் தால் காப்பாற்றப்படுகிறாள்.

**ரோகிணி :** ஏழை ஹரிஜனப் பெண். சந்திரனுக்கு வாழ் வளித்த அனாதை.

---

# நாடகத்தைப்பற்றி—

............வாள் வலியால் மதத்தைப்பரப்பிய மன்னர் மன்னர்கள் வாழ்ந்த மண்ணிலே வேதம்வகுத்த வழிசெல்ல மறுத்த மன்னனை மாய்க்க மதகுரு இராகுலன் முயல்கிறான். அரசனைமாய்த்து அரசைக் கைப்பற்றி அரசியுடன் காமலீலை யாட அவன் எண்ணவில்லை, எனவே நிர்மலா, ரோகிணி இவர்களின் கண்ணியத்திற்கு அவன் களங்கப்பொருளாக இருக்கவில்லை.

மதவெறியர்கள் மோக வெறியர்களாகவே இருக்க வேண்டும் என்ற கருத்து இந்த நாடகத்தில் புகுத்தப்பட வில்லை. எனவே மதப்பித்துமட்டுமே இராகுலனை கெட்ட உருவமாக தோற்றுவிக்கிறது.

அறிவு வளர்ச்சியை அடக்கி ஒடுக்கும் அனுசார மூடப் பழக்கவழக்கங்களை அரசன் கண்டிக்கிறான். குருதேவனின் மதவெறி கண்ணியில்சிக்கிய அரசி நிர்மலா மன்னனை எதிர்க் கிறாள். காளியின் பெயரால் ராணியை கைவசமாக்கி மன்னனைக்கொல்ல திட்டம் தீட்டுகிறான் இராகுலன். சதி வெளிப்படுகிறது. தன் கணவனையே பலிபீடத்திற்கு இழுக்கிறான் குருதேவன் என்பதை உணர்ந்த ராணி காளி தேவியை மறந்து கண்கண்ட தெய்வமாகிய கணவன் காலடி யில் வீழ்கிறாள்.

இராஜபக்தி, குருபக்தி, தெய்வபக்தி என்ற மூன்று ஈட்டி முனைகளால் தாக்கப்படுகிறான் சந்திரன். வேகம் குறையும் சமயங்களில் வேதகுரு அவனுக்கு மேலும் மேலும் போதையை ஊட்டி வருகிறான். முடிவிலே மங்கை ரோகிணி யின் மலரம்பு அவன் மார்பைத்துளைக்க போதை தெளி கிறான்.

.........“வாழ்க்கை வாழ்வதற்கே”! ஆனால் வாழ்க் கைப் பாதையிலிருந்து தடம் மாறி விட்டான் சந்திரன்.

பாதாள படுகுழியில் விழப்போகும் அவனை தன் மார்பிலே தாங்கி வாழ வழி வகுத்துக் கொடுக்கிறாள் ரோகிணி. தன் முன் செல்லும் நேர்மையான பாதை வழி, காவி உடையை களைந்து கன்னியை இழுத்துச் செல்கிறான் சந்திரன்.

இந்த நாடகம் படிப்பதற்கு மட்டுமே. நடிப்பதற் கல்ல. எனவே நாடக மேடைக்கு வேண்டிய நகைச்சுவைப் பகுதி இந்த நாடகத்தில் சேர்க்கப்படவில்லை.

ஆக்கியோன்.

# பாபத்தின் சின்னம்

---

## காளி கோயில்

[ பயங்கர காளிதேவியின் கரிய கல்லுருவம். அதன் காலடியில் சிவந்த அரளி மலர்மேடு. முன்னல் இரத்தப் பெருக்கெடுத்தோடும் பலிபீடம். தப்பட்டைகளின் இரைச்சலுடன் சங்கநாத முழக்கம். இவ்வளவையும் கடந்து நிற்கிறது இராஜகுரு இராகுலன் தன் அடித் தொண்டையில் உச்சரிக்கும் "ஓம் காளி" மந்திரம்.! சீடன் சந்திரன் ஒருபுறம் ஒதுங்கி நிற்கிருன். பூஜையும் முடிகிறது.]

இரா: ஜேய் தேவி பராசக்தி! சந்திரா! மக்களை காக்கும் மகாகாளியின் இரத்த தாகம் தீர்க்க மன்னனிடமிருந்து மாடுகளும் ஆடுகளும் ஏன் இதுவரை வரவில்லை?

சந்தி: எதுவும் தெரிவதற்கில்லையே குருதேவா!

இரா: மண்டலத்தை ஆளும் மகா காளியின் கோப திருஷ்டிக்கு மன்னன் ஆளாகிவிடக் கூடாதே என்று அஞ்சுகிறேன். வர வர அவன் மூளையே மழுங்கிவிட்டது. உயிர்களை காக்கும் உலகநாயகிக்கு அபசாரம் செய்ய ஆரம்பித்து விட்டது அவன் அரசாங்கம்.

சந்தி: ராணி நிர்மலாவும் கூடவா!

இரா: அவள் சரிவரவே தன் கடமையைச் செய்து வருகிருள். நான் அவளை அறிவேன். அவள் என்னை அறிவாள். அன்னையை அபசாரம் செய்யும் அரசாங்கத்தால் அவனிக்கே ஆபத்து ஏற்படலாம்.

எனது உடலின் ஒவ்வொரு துளி இரத்தத்திலும் வியாபித்திருக்கும் துர்கா தேவியின் திருநாமம் மன்னனின் மடமையிலிருந்து மக்களைக் காப்பாற்றி வருகிறது. சந்திரா! செல் சீக்கிரம். சொல் மன்னனிடம் மகா காளியின் இரத்த தாகத்தால் உண்டாகும் துடிப்பின் இதய ஒலி என் காதுகளில் சதா அலறிகொண்டிருக்கிறதென்று. உயிர் பலிகளை பூஜா நியமத்தோடு சீக்கிரம் அனுப்பச் சொல்.

(சந்திரன் இராஜ குருவை வணங்கிச் செல்லும்போது ரோகிணி வருகிருள்)

**சந்தி:** (அன்புடன்) ரோகிணி!

**இரா:** (கோபமுடன்) அபசகுனக்சாரி! செல் வெளியே.

**ரோகி:** ஏன் சுவாமி?

**இரா:** நீ தீண்டப்படாதவள்; சமுகத்திலே ஒதுக்கப் பட்டவள்.

**ரோகி:** சட்டத்தின் பெயரால் எங்கள் இனத்திற்கு ஆலயப் பிரவேச உரிமை இருக்கிறது.

**இரா:** அரசாங்கச் சட்டம் அன்னையைக் கட்டுப்படுத்தாது. சன்னிதானத்தை விட்டு வெளிச்செல்

**ரோகி:** ஜாதி சமயப் பற்றில்லா எங்கள் நந்தனையும், இராமலிங்கத்தையும் அணைத்துக்கொண்ட ஆண்டவனின் அன்பு ஜோதி............

**இரா:** உன்னையும் சாம்பலாக்குமுன் வெளியேறிவிடு.

**சந்தி:** ரோகிணி! குருநாதரின் ஆணைக்கு பணிந்துகொள். கோவிலை விட்டுப் போய்விடு.

(ரோகிணி மௌனமாக வெளியேறுகிருள்)

இரா: மகனே! ரோகிணியின் மாயாஜாலத்தில் மயங்கி விடாதே. அவள் ரோஜா நிறக்கன்னங்களின் காம வெறியால் மயங்கிவிடாதே. அவள் செந்நிற அதரங்களின் அமிர்தபானம் செய்து மது உண்ட வண்டுபோல் திகைத்து விடாதே. கத்திமுனைக் கும் கூர்மையான அவளது சுழலும் விழிவீச்சில் கட்டுண்டு கிடந்துவிடாதே. உனது வதனத்தின் ஆகர்ஷண சக்தியை இந்த மாயை எனும் மூடுபனி மறைக்காமல் காத்துக்கொள் மகனே! மனதைத் திடப்படுத்தி போய்வா மன்னனிடம்.

(சந்திரன் இடம் விட்டு நகர்கிறான்)

காட்சி மாற்றம்

(ராணி நிர்மலா தேவியின் முன் நின்றுகொண்டிருக்கிறாள்.)

ராணி: அம்பிகா! நான் உனக்கு என்ன அபராதம் செய்தேன்! பெருக்கெடுத்து ஓடும் இந்த சிவந்த இரத்த வெள்ளம்இன்னும் உன் தாகத்தை தணிக்கவில்லையா? உன் தாகம் தணிந்து எனக்கு பிள்ளைப்பேறு கிடைக்க ஜீவராசிகள் அத்தனையும் பலி கொடுக்க வேண்டுமா? என்னை ஏன் இவ்வாறு பரிதவிக்க வைக்கிறாய்? உன்னை ஏறெடுத்தும் பாராதவர்களுக்கு பைங்கிளி போன்ற குழந்தைகளைக் கொடுக்கிறாய்! — ஏழைகளுக்கு எண்ணற்ற சிசுக்களை அளிக்கிறாய்! — விபசாரிகளுக்கு வேண்டிய குழந்தைகளையும் கொடுத்து சிசு வதைக்கும் வழிவகுத்துக் கொடுக்கிறாய்! வேசிக்கு கொடுத்த குழந்தை விலை கொடுத்து வாங்கப்படுகிறது! விதவைக் களித்த சிசு வேலிக்கருகே புதைக்கப்படுகிறது!! ஏழை ஈன்ற இளம் குழந்தை பகிரங்க ஏலத்தில் விடப்படுகிறது!!! ஆனால் நாட்டை ஆளும் நான் ஏங்கித்தவிக்கிறேன் ஒரே ஒரு குழந்தைக்கு.

(இராகுலன் பிரவேசம்)

இரா: நிர்மலா, முகத்தில் கவலைக்கோடுகளின் காரணம்?

ராணி: (தலைவணங்கி) தேவா, ஒவ்வொரு நாளும் தேவிக்கு ஏற்படும் இரத்தத் தாகத்தை நான் உயிர் பலிகளின் மூலம் தீர்த்துவைக்கவில்லையா?

இரா: அது உன் கடமை நிர்மலா

ராணி: இதய பூர்வமான காணிக்கைகளை நான் தினமும் செலுத்திவருகிறேனே!

இரா: அதை இன்னும் தேவி எதிர்பார்க்கிருள்.

ராணி: எனக்கு விமோசனம்?

இரா: விளங்கச் சொல்.

ராணி: அவள் பக்தையாகிய நான் ஏங்கி நிற்கிறேனே ஒரே ஒரு குழந்தைக்காக.

இரா: மகளே, மனங்கலங்காதே. அவள் உக்ர நெஞ்சத்தை சாந்தப்படுத்த இன்னும் சில விசேஷ பலிகளைக் கொடுப்போம். நிம்மதியாகச் செல்.

(ராணிபோகிருள்) ஜெய் தேவி பராசக்தி!

காட்சி மாற்றம் — ஹரிஜன வீதி

**[அன்று பராசக்தி கோயிலில் அரசாங்கத்தின் பெயரால் விசேஷ பூஜை. காளிதேவிக்கு பலி கொடுக்க அரண்மனை சேவகர்கள் சேரியில் நுழைந்து அங்குள்ள ஆடுமாடுகளை பலவந்தமாக மடக்கி ஓட்டி வருகிருர்கள். சேரியில் ஒரே குழப்பம் ஏற்படுகிறது. அங்கு வசிக்கும் அனுதைச் சிறுமி ஏழைப் பெண் ரோகிணியின் ஆட்டுக்குட்டியும் கொள்ளையிடப் படுகிறது. சேவகர்கள் மக்களை மிரட்டி ஓட்டுகிருர்கள். ரோகிணி அழுதுகொண்டே சேவகர்களை பின்பற்றி ஓடுகிருள்.]**

காட்சி மாற்றம் அரண்மனே

[மன்னன் ஜீவகன் தன் நீதிமன்றத்தில் அமர்ந்து மக்களின் குறைகளை ஆராய்ந்து நீதி வழங்கிக் கொண்டிருக்கும்போது, ரோகிணி அழுது கொண்டு ஓடோடியும் வருகிருள்.]

ரோகி: (வணங்கி) அரசே, எனது ஆட்டுக் குட்டியின் உயிரை வாங்கி உதிரத்தைச் சிந்தச்செய்த சண்டாள சண்டிகாதேவியின் கற்சிலையை அடியோடு தகர்க்கச் செய்ய உத்தரவளிக்கும் நீதிமன்றம் உங்கள் அரசாங்கத்தில் இல்லையா? ராஜா ஜீவகனின் நீதி பரிபாலனத்திலுமா இந்தக் கொடுமை!

ஜீவ: குழந்தாய், யாரம்மா நீ! ஏன் அழுகிருய்? உன் கவலை எதைப் பற்றியது? உன் போன்ற ஏழைகளுக்கு நீதி வழங்க மங்களபுரி சிம்மாசனம் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறது. நீதி எதற்கு வேண்டுகிருய்?

ரோகி: அரசே, நான் ஒரு அனுதை ஹரிஜனப் பெண். என் பெயர் ரோகிணி. அரண்மனே சேவகர்கள் நான் செல்வமாக வளர்த்து வந்த ஆட்டுக்குட்டியை பலாத்காரமாக பிடுங்கிவந்து காளியின் கோர உருவத்திற்கு பலியிட்டு விட்டார்கள். உயிரிழந்த ஆட்டுக் குட்டிதான், எனக்கு பூரண ஆதரவாக இருந்தது. என்னுடைய செல்வமும் சந்தோஷமும் அது ஒன்றேதான்.

ஜீவ: (சிரித்துக்கொண்டு) குழந்தாய், ஒரு ஆட்டுக்குட்டிக்காக வேண்டி ஏன் இப்படி கலங்குகிருய்! தாய் தானே தன் செல்வத்தை ஏற்றுக் கொண்டாள். இதைப் போல் கணக்கற்ற உயிர்கள் தினமும் பலி கொடுக்கப் படுகின்றனவே. இந்த அற்ப விஷயத்திற்காக ஒருவரும் உன்னைப் போல் அரசனின் முன் நின்று ஆர்ப்பரிக்கவில்லையே. காளிதேவியையே

குற்றவாளியாக்கி நீதி கேட்க்கும் உனக்கு யாம் எந்த வித நீதி வழங்க முடியும். வேண்டுமானால் நீ விரும்பும் பொருள் தர கட்டளை இடுகிறோம்.

**ரோகி:** அரசே, பாலூட்டி சீராட்டி பாராட்டி வந்த தன் குழந்தையின் இளம் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் பராசக்தியின் பக்தன் தானே நீங்கள்? உலகையாளும் அன்னை உயிர் பலி வேண்டினால், மன்னனே! கொஞ்சமும் சிந்தியாமல் கொடுங்கள் உங்கள் மைந்தனை மாகாளியின் இரையாக!

**ஜீவ:** (கோபமாக) ரோகிணி!

**விக்ர:** இது மன்னர் சபை, மரியாதையுடன் பேசு!

**மஹேந்:** மண்டியிட்டு கெஞ்சிக் கேளம்மா!

**ரோகி:** நீதி கேட்கவும் மன்னர் மன்றத்தில் மண்டியிட வேண்டுமா! இது அதிகார வெறி பிடித்த ஆட்சி பீடமா! அல்லது நியாயம் வழங்கும் நீதிமன்றமா? தன் கணவனைக் கொன்ற நூர்ஜஹானை நீதி கேட்டுச் சென்ற வண்ணாரப் பெண்ணின் கையில் வில்லம்பு கொடுத்து நீதியின் பெயரால் தன் நெஞ்சைத் திறந்து காட்டிய ஜஹாங்கீர் சக்ரவர்தியின் செங் கோல் அரசாட்சியை சிந்தையில் வையுங்கள்! பசு வின் கன்றிற்காக தன் மகனை தேர்க் காலில் படுக்க வைத்து நீதியை நிலைநிறுத்திய மனுநீதி சோழனின் மங்கா புகழை மறந்து விடாதீர்கள்! இழுத்து வாருங்கள் உங்கள் இராஜகுருவை நீதிமன்றத்திற்கு! அல்லது ஏழை என் குடிசைக்கு எழுந்தருளுங்கள் நீதிக்காக! நான் வழங்குகிறேன். குழந்தையின் உயிருக்காக கொஞ்சம் பொருள் கொடுத்து பெற்ற தாயை தேற்றுவது தான் நீங்கள் கண்ட நீதியோ! குற்றமற்ற குழந்தையை கொலை செய்து அதன் குருதியை கல்லுருவத்திற்கு ஊட்டுவது தான் நீங்கள் கண்ட நியாயமோ! இதுதான் உங்கள்

செங்கோல் அரசாட்சியோ! அரசே தாங்கள் பரா சக்தியின் பக்தரென்றால் அலசிப் பாருங்கள் "ஆசிய ஜோதி"யை. நினைவில் நிறுத்துங்கள் புத்தரின் கருணையை.

[புத்தரின் கருணை உள்ளத்தை சித்தரித்து உயிர் பலிகூடாது எனும் பொருள்பட பாட்டொன்று கேட்கிறது. அரசன் அந்த பாட்டிலே மெய்மறந்து போகிறான். தன் நிலைக்கு வந்த உடன்.]

ஜீவ: ரோகிணி, வா என்னுடன் (மன்னன் மறைகிறான்).

காட்சி மாற்றம் கோயில் மூலஸ்தானம்

[சந்திரன் காளியை வணங்கி நிற்க, ஜீவகன், ரோகிணி, சேவகர் வருகை.]

ஜீவ: சந்திரன், இந்த ஏழைப் பெண் ரோகிணியின் ஆட்டுக் குட்டியை பலவந்தமாகப் பிடுங்கிவந்து காளிதேவிக்கு பலிகொடுத்தது உண்மைதானா? இப் பேர்ப்பட்ட பலிகளையுமா காளிதேவி அன்புடன் ஏற்றுகொள்கிறாள்?

சந்தி: அரசே, தினசரி பலிக்காக எவ்விதம் எங்கிருந்து உயிர் பிராணிகள் கொண்டுவரப் படுகின்றன என் பதை என்னால் எப்படிச் சொல்லமுடியும்! ரோகிணி! இந்த பரந்த உலகத்தைக் காத்து ரக்ஷிக்கும் நமது தாயே தனது பிரீதியான ஆட்டுக்குட்டியை ஏற்றுக் கொண்டால் அதற்காக சந்தோஷப் படுவதை விட்டு நீ அழுது கொண்டிருந்தால் அவள் கோபத்திற் கல்லவா ஆளாக வேண்டிவரும்.

ரோகி: சிற்பியின் உளியால் உருவான கல்லுருவம் மனித சக்தியை மீறிவிட்டதா!

சந்தி: அபசாரம் செய்யாதே ரோகினி! மகா பாவம்.

ரோகி: எது அபசாரம்? எது பாவம்? காட்டுப்புலிக்கு பயந்து என் புகலிடம் தேடிய ஆட்டுக்குட்டியை நாட்டுப் புலி பூஜாரி பகிரங்கமாக படுகொலை செய்தது பாவமில்லை! ஒருவள் தன் ஆருயிர் குழந்தையின் உயிருக்காக உயிரற்ற கல்லிடம் மன்றாடுவது பாவம்! அபசாரம்!

ஜீவ: சந்திரன் கருணை உள்ளம் படைத்த காளிதேவிக்கு கன்று காலிகளை கதற கதற கழுத்தறுத்து உதிரம் ஊட்டுவதல்லவா பாவம். சக்திதேவியின் சித்தம் கலங்கச் செய்யும் உங்கள் பயங்கரப் பலி பிரசாரமல்லவா அபசாரம். பாராளும் பரிசுத்த பராசக்தியின் கருணை உள்ளத்தை உங்கள் போலி பிரச்சாரத்தால் கல் மனதாக்கிக் காண்பித்து விட்டீர்கள்! தேவியின் சந்நிதானத்தில் நிராதரவாக நிற்கும் இந்த அபலையின் ஆட்டுக்குட்டிக்கு உயிரூட்டும் சக்தி உனக்குண்டா? அல்லது எனக்குத்தானிருக்கிறதா?......

ரோகி: இல்லை இந்த கற்சிலைக்குத்தானுண்டா?

சந்தி: அன்னையை தூஷிக்காதே ரோகிணி.

ரோகி: அன்னை! யார் யாருக்கு அன்னை? என் ஆட்டுக் குட்டிக்கு நானல்லவா அன்னை. அதை எடுத்து வளர்த்த எனக்கல்லவா தெரியும் அதன் உயிரின் அருமை.

ஜீவ: சந்திரன், மூட பழக்க வழக்கத்தின் முத்திரை மை மங்கிவிட்டது. அகல விரிந்த அறியாமையின் கண்களில் ஆராய்ச்சியின் ஆணிவேர் ஆழபதிந்து விட்டது ...காளிதேவியின் கருணை உள்ளம் களிப்படைய, மனிதனின் சௌகரியத்திற்காக மனிதனால் சிருஷ்டிக்கப்பட்ட மதத்தை மாற்றி அமைக்க மத குருவை மன்றத்திற்கு சீக்கிரம் வரச்சொல்.

ரோகிணி, வா. (ஜீவகன் போக இடை மறித்து)

சந்தி : அரசே, வேதங்களால் ஆக்கப்பட்ட மதத்தைமாற்றி அமைக்க மன்னக்கு அதிகாரமில்லையே !

ஜீவ : மிருகங்களைவிடக் கேவலமாக நடக்க மனிதனுக்கு இடம் கொடுக்கும் மதத்தை மாற்றிதான் அமைக்க வேண்டும்.

சந்தி : பொது மக்கள் அபிப்பிராயம் மன்னனைவிட வலிமை வாய்ந்தது அரசே !

ஜீவ : மக்கள் மடையர்களல்ல. அக்காலம் மலையேறி விட்டது. வேத புராணங்களை வீசி எறிந்துவிட்டு விஞ்ஞான ஏடுகளை திருப்பும் காலமிது !

ரோகி : சந்திரா, இரக்க உள்ளம் கொண்ட நீயா இவ்விதம் பேசுகிறாய்.

ஜீவ : வீண்வாதம் அவசியமில்லை. விரைந்து சென்று வேத குருவை வரச்சொல். ரோகிணி வா (இருவரும் வெளியேறல்)

காட்சி மாற்றம் : அரண்மனை மண்டபம்

[ஜீவகன் கையில் பிரகடனப் பத்திரிகை வைத்துக்கொண்டு உலவியபடி]

ஜீவ : தெய்வங்கள் ஜீவராசிகளை காப்பதற்கே. அழிப்பதற்கல்ல. சமத்துவம், சகோதரத்துவம், அமைதி, சாந்தம், நிலவ வேண்டிய தேவாலயங்களில் இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆடுமாடுகளின் அலறல் சதா ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. பரிசுத்தமாக இருக்கவேண்டிய இடம் பாபத்தால் கறைபடுத்தப்படுகிறது. உலகம் பல கோணங்களில் முன்னேறிக் கொண்டிருக்கும் இக்காலத்தில் நம் நாடு மூடக் கொள்கைகளால் பின்னுக்கிழுக்கப்படுகிறது. அறியாமைக்கும், அனுச்சாரத்திற்கும், அறிவு வளர்ச்சியை அடக்கி ஒடுக்கும் ஆராய்ச்சி

அற்ற ஈனச் செயல்களுக்கும் எமது நாட்டில் இனி இடமில்லை. எனவே, மக்கள் இனத்தின் நலத்திற்காக இன்று முதல் எமது ராஜ்யத்தில் தெய்வங்களின் பெயரால் நடத்திவரும் பகிரங்கக் கொலையான பலியெனும் கொடிய வழக்கத்தை நிறுத்தி விட்டோம். எம் மதத்தைச் சார்ந்தவர்களானாலும் சரி, எத்தன்மை படைத்தவர்களா யிருந்தாலும் சரி, எமது உத்தரவை மீறுகிறவர்கள் ஜீவ பரியந்தம் சிறை தண்டனைக்கு அருகதை ஆவார்கள். யாரங்கே? (சேவகன் வருகை) இப் பிரகடனத்தை நாட்டுமக்களுக்குப் பறை சாற்று.

விக்ர: இச் சட்டம் ராஜ குடும்பத்தாரை பாதிக்குமா!

ஜீவ: அவசியம் கட்டுப்பட்டுத் தான் தீர வேண்டும். ஒவ்வொரு ஜீவராசியும் என் அவசரச் சட்டத்தை அனுசரித்தே ஆகவேண்டும்.

(இராகுலன் வருகை)

இரா: ஜேய்தேவி பராசக்தி! ஜீவகா, சட்டம் சண்டிகா தேவியை ...........

ஜீவ: ...... மட்டுமல்ல, தங்களையும் கட்டுப்படுத்தும். வணக்கம் குருதேவா! அமருங்கள்.

இரா: சொப்பன உலகத்திலிருந்து தெளிந்து நில்.

ஜீவ: தெளிந்த பின்னர் தான் நிமிர்ந்து நிற்க தைரியம் பிறந்தது சுவாமி.

இரா: அவசரச் சட்டத்தின் காரணம்?

ஜீவ: அன்னை பராசக்தியின் ஆணை.

இரா: அன்னையின் ஆணைக்கும் மன்னனுக்கும் தொடர்பு!

ஜீவ: படுகொலையான பலியை உடனடியாக தடுக்க கனவின் மூலம் காளியின் கட்டளை.

இரா: நூற்றுண்டுகளாக கொதிக்கும் இரத்தத்தை பருகி வந்த அன்னையின் மனமாற்றத்திற்குக் காரணம்?

ஜீவ: இல்லை. அன்னை ஒரு போதும் இரத்தம் குடித்த தில்லை. இரத்தத்தால் ஊறி கிடக்கும் பலி பீடத்தைப் பார்த்தாலே தெரியும்.

இரா: உன் மடமைக்கு மெருகு கொடுக்காதே மன்னு! உன் கனவில் வந்த அன்னை எனக்கேன் காக்ஷி அளிக்கவில்லை?

ஜீவ: மனக்கண் குருடானால் மகாகாளியை காண்பதரிது குருதேவா!

இரா: (கோபமுடன்) உலகையாளும் மகாமாயா, மங்களபுரி மன்னன் அரண்மனை வாசலில் நின்று விண்ணப் பித்துக் கொண்டாளோ!

ஜீவ: இல்லை ஏழைப்பெண் ரோகிணியின் மூலம் விண்ணப் பித்துக் கொண்டாள்.

இரா: ஜீவகா, நிலைதடுமாருதே. வேதங்கள் இயற்றிய சட்டதிட்டங்களை மாற்றி அமைக்க ஒரு மன்னனுக்கு அதிகாரமில்லை என்பதை எச்சரிக்கிறேன்.

ஜீவ: மகாகாளியின் பரிசுத்தவாக்கு வேதங்களின் சட்ட திட்டங்களைவிட மேலானது. எனவே அன்னையின் ஆக்ஞை எமது சட்டமாக உருப்பெற்றது.

இரா: நீ ஒரு நாஸ்திகன்!

ஜீவ: கடவுளைக் கருவியாக வைத்து காசு திரட்டும் கயவர்களால் ஆராய்ச்சியாளர்களுக்கு கொடுக்கப்படும் பட்டம்!

இரா. பாபி!

ஜீவ: தம்மை தற்காத்துக் கொள்ள சவக்கிடங்கிலும் தர்பையைப் பிடித்து யாசகம் வாங்கும் தன்னலக் கும்பலால் ,தன்மானமுள்ளவர்களுக்கு வழங்கப்படும் வாழ்த்து!

இரா: தெய்வத்துரோகி!

ஜீவ: புரையோடிப்போன உள்ளங்களின் புண்களை ஆற்ற முனையும் பகுத்தறிவாளர்களுக்கு, புல்லறிஞர்கள் உபயோகிக்கும் பதம். குருதேவா, பணியேற்க தாங்கள் சொல்லாம். ஆலயத்திற்கு வரும் ஒவ்வொரு பக்தனிடமும் எமது பிரகடனத்தை தெரிவித்துவிடுங்கள்.

இரா: (எழுந்து) அந்த பிரகடனத்தை காளிபக்தனை நான் மீறுகிறேன். கர்வம் கொண்டு கண்மூடித் தனமாக மகாகாளியை உனது ராஜ்யத்தின் ஒரு சாதாரண பிரஜை என்று நினைத்து அவள் மீதுமா உன் அதிகாரத்தைச் செலுத்துகிறாய். அந்திம காலத்திற்கு அடிகோலிவிட்டாய்! நான் வருகிறேன் (கோபமுடன் வெளியேறுகிறான்)

மஹேந்: அரசே, காளிதேவிக்கு எதிராக சட்டங்களை ஏற்படுத்த தங்களுக்கு உரிமை இருக்கிறதா?

ஜீவ: தெய்வங்கள் வழி தவறி நடந்தால் அவைகளை நேர்மையான பாதைக்கு இழுத்துச்செல்ல மன்னனுக்கு மட்டுமல்ல மகேந்திரா! ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உரிமை உணடு.

விக்ர: இதை அவசரச் சட்டமாக்கியிருக்க வேண்டாம் அரசே!

ஜீவ: எமது நாட்டில் பாபச் செயல்களையும் அக்ரமங்களையும் வேரோடு பிடுங்கி எறிய காலத்தை நிர்ணயிப்பதில்லை விக்ரமா!

மகேந்: நமது மூதாதையர்களின் பக்தியின் சின்னம் பலிகள். அதை மன்னர் அவமதித்து விட்டார்.

ஜீவ: பக்தியின் சின்னமல்ல மகேந்திரா! பாபத்தின் சின்னம்! மடமையின் சின்னம்!! வாதம் அவசியமில்லை. நானிட்ட சட்டம் நாடு முழுவதும் பரவட்டும்.

காட்சி மாற்றம் கோவில் மண்டபம்

[இராகுலன் கோபமுடன் உலவிக் கொண்டிருக்கிருன்.]

இரா: நயவஞ்சக நாஸ்திகர்களின் கூட்டம் நலிந்துவிட்டது இந்த நாட்டில். அக்கிரமங்களுக்கு அரவணைப்பு மலிந்துவிட்டது மன்னன் மன்றத்தில். நாஸ்திகன் என்ருல் பகுத்தறிவாளன் என விளக்கம் தருகிருன் வேந்தன். என் கால் கழுவிய கசட்டு ஜலத்தைக் குடிக்கச் செய்கிறேன் கருங்காலிகளை. அவர்களை கண்டம் கண்டமாக வெட்டி எனது சண்டிகாதேவிக்கு பலி கொடுத்து அண்டம் அதிரச் செய்கிறேன்.

(சந்திரன் வருகை)

சந்தி: குருதேவா, ஏன் இந்த கலக்கம்!

இரா: (பெருமூச்சுவிட்டு) மகனே, சொல்வதற்கு நா தடுமாறுகிறது. சக்தியற்ற தன் ஆசனத்தில் இருந்து கொண்டு சக்தி தேவியையே ஆட்டிவிட்டான் மன்னன்.

சந்தி: காளிதேவியையா! ஜீவகனு?!

இரா: ஆம்! என்னையும், உன்னையும், உலகத்தையும், புராண இதிகாச வேதங்களையும் கூடத்தான்! மதியிழந்த மன்னன், மானங்கெட்ட தன் அரியாசனத்தை மகா காளியின் ஆலய கலசத்திற்கும் மேலாக உயர்த்தப் பார்க்கிருன்! (ஆகாயத்தைப் பார்த்து) தெய்வங்களே! நாஸ்திக மன்னனின் சட்டத்தை நீங்களுமா தலைகுனிந்து ஆதரிக்கிறீர்கள்! நீங்களும் அவன் பிரஜைகள் என்று கருதிவிட்டீர்கள்! தெய்வங்களைக் கட்டுப் படுத்த சட்டங்கள் இயற்றும் நாஸ்திகனை அழிக்க உங்கள் ஒருவரிடமாவது சக்தியில்லையா? எங்கே உங்கள் ஆயுதங்கள்! எங்கே உங்கள் சக்கரங்கள்! எங்கே உங்கள் வஜ்ரதண்டம்! கதாயுதம்!! கோதண்டம்!!! அத்தனையும் ஒரு

நாஸ்திகன் முன்னால் சக்தியற்று போய்விட்டன! தேவலோகம் இவ்வளவு மலினமடைந்துவிட்டதா! கவலையில்லை. நீங்கள் இல்லாமல் போனாலும் கவலையில்லை உத்தம ஜாதியில் பிறந்த நாங்கள் இருக்கிறோம் நாஸ்திக மன்னனின் கொதிக்கும் இரத்தத்தை உங்களுக்கு தாரை வார்க்க. (சாந்தமுடன்) சந்திரா, மனம் தடுமாறுகிறது.

சந்தி: தேவா, சட்டத்தின் சாரம்?

இரா: மட்டரகமான கற்பனை. ஆடுமாடுகளின் அலறல் சதா ஆலயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறதாம்; தேவாலயங்களில் இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறதாம்; பரிசுத்தமாயிருக்க வேண்டிய இடம் பாபத்தால் கறைபடுத்தப் படுகிறதாம்; ஜீவஹிம்சை கூடாதாம்; எனவே அவசர சட்டமிட்டு பலியை நிறுத்திவிட்டான்.

சந்தி: குருதேவா, மனித உள்ளத்தில் உருப்பெற்ற சட்டங்களைக் கண்டு மனம் ஒடிந்துவிடுவதா?

இரா: ஆம் மகனே ஆம்! உண்மைதான். ஐந்து வினாடியில் தகர்த்தெறிவோம் அரச சட்டத்தை. காளியின் சக்தியும், ராணியின் பக்தியும் கையிலிருக்கும் போது காவலன் சட்டம் நம்மை என்ன செய்ய முடியும்? (ஆனந்தம் பொங்க) ஜேய்தேவி பராசக்தி!

காட்சி மாற்றம் அந்தப்புரம்.

[ராணி சிந்தனையிலிருக்க சேவகன் வருகை.]

சேவ: ......... பூஜா வரிசைகள் கோவிலிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டு விட்டன!.........

ராணி: (கோபமுடன்) தேவி சந்நிதானத்திலிருந்தா?

சேவ: ஆம்.

ராணி : திருப்பி அனுப்பியது யார்?

சேவ : (மௌனம்).

ராணி : கனவு கலைந்து வருகிறாயா!

சேவ : இல்லை அம்மணி. சுய உணர்வுடன் தானிருக்கிறேன்.

ராணி : இந்த நிகழ்ச்சியின் மர்மம். பராசக்திதான் எனது பலியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாளா!...... எனது வணக்கத்தை தெரிவித்து குருதேவரை உடனே இங்கு வரச் சொல்.

(சேவகன் மறைய மன்னன் வருகை).

ராணி : (அருகிற் ஓடிச் சென்று) அரசே, விஷயம் அறிந்தீர்களா! அன்னை பராசக்திக்கு பலி கொடுக்க நான் அனுப்பிய பூஜா வரிசைகள் திருப்பி அனுப்பப்பட்டு விட்டனவாமே!

ஜீவ : அறிவோம் தேவி.

ராணி : அறிவீர்களா! அறிந்த பிறகுமா அவமானத்தை சகித்துக் கொண்டிருக்கிறீர்கள். மங்களபுரியின் மாசற்ற மன்னன் குடும்பத்திற்கு மானஹானி விளைவித்தவனை விட்டுவைத்தா வேடிக்கை பார்க்கிறீர்கள்! திருப்பி அனுப்பியது யார்?

ஜீவ : மங்களபுரி மன்னன்.

ராணி : ........ தாங்களா!! ......

ஜீவ : ஆம். தெய்வங்கள் பெயரால் பலி கொடுத்து இரத்தம் சிந்தும் கொடிய வழக்கத்தை எமது நாட்டில் தடை செய்துவிட்டோம்.

ராணி : அரசே, காளிதேவியின் கோபக் கண்களுக்கு ஆளாக வேண்டாம். ஆலயத்தின் எல்லைக்கு அப்பால் தான் தங்கள் ராஜ்ஜியம் நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. எங்கே தங்கள் சட்ட திட்டங்கள் தகர்த்

தெரியப் படுகின்றனவோ அங்கே உங்கள் அதிகாரத்தை செலுத்த வேண்டாம்.

ஜீவ : கட்டளை என்னுடையதல்ல; தாயின் திருவுள்ளம்.

ராணி : அரசே, வேதசாஸ்திரங்களுக்கு தாங்கள் ஒரு சாபக்கேடாக இருக்கவேண்டாம. என் வேண்டுகோளை சற்று செவிசாய்த்து கேளுங்கள்.

ஜீவ : சொல்.

ராணி : அரசே, உத்தம ஜாதியர்களுக்கு அவர்கள் உரிமையைக் கொடுத்து விடவேண்டும். உயிர்பலி பிரகடனத்தை மாற்றி அமைக்க வேண்டும். வேந்தன் தன்னைவிட வேதம் ஒதுபவர்களை மேலாகக் கருத வேண்டும். வேதங்களில் காணும் சட்ட திட்டங்களை மாற்றி அமைத்தல் கூடாது. இவைகளே என் வேண்டுகோள்.

ஜீவ : ராணி புல்லேந்திய கையால் வாளேந்துவோம் என்று வாய்ஜம்பம் பேசுவோரும்; "பார்ஜோதியை" என்று பாமரமக்களை ஏமாற்றி படுகுழியில் தள்ளும் பித்தலாட்டகாரர்களும், உன் பட்டியலில் சேர்க்கப் பட்டிருக்கிறது வருந்தத்தக்க விஷயம். அன்றியும் மனிதப் பிறவியில் உத்தம ஜாதி என்னும் வகுப்புப் பிரிவை வேரோடு கிள்ளி எறிய கங்கணம் கட்டி விட்டோம். மேலும் காளிதேவிக்கு யாம் இயற்றிய உயிர்பலி சட்டத்தை அர்ப்பணித்தும் விட்டோம். இனி அதிலிருந்தும் மாற முடியாது.

ராணி : (கோபமாக) பலி கொடுப்பதாக நானும் தேவி சந்நிதானத்தில் பிரதிக்ஞை செய்து விட்டேன். அதிலிருந்து நானும் மாற முடியாது.

ஜீவ : நிர்மலா நிதானித்து நடந்துகொள். பிடிவாத குணம் பெண்களின் பிறப்புரிமை; அறிவேன். அது அன்று! தலைவன் பின் தொடர தலை நிமிர்ந்து

நடந்தும், மணந்தவன் காண மாற்றானோடு கலந்தும், பெற்ற மகனை மணாளனாகக் கொண்டும் ஆண் மக்களை அடக்கி ஒடுக்கி யதேச்சையாக திரிந்தது மக்களை மடையர்களாக்கிய பிரம்ம சூத்திர காலத்திற்கு முன். இன்று அதே பெண் மரபு கணவனை கவுர விக்கும் காலம். மேலும் நீ எமது பிரஜை என் பதை உனக்கு நினைவூட்டுகிறோம். (மன்னன் மறைகிறான்).

(இராகுலன் வருகை).

இரா: ஜேய்தேவி பராசக்தி !

ராணி: நமஸ்காரம் குருதேவா ! அமருங்கள்.

இரா: எமது ஆசீர்வாதம் உனது வெற்றிக்கு துணையாக நிற்கும். மகா காளி !

ராணி: குருதேவா, எனது பூஜா வரிசைகள் சந்நிதானத்திலிருந்து திருப்பி அனுப்பப்பட்டு விட்டன !

இரா: அரசனின் அட்டூழியங்கள் அன்னையின் கிருபைக்கும் மேலோங்கி இருக்கும்போது பூஜா வரிசைகள் திருப்பி அனுப்பப்பட்டதில் ஆச்சர்ய மொன்றுமில்லை ராணி.

ராணி: இதனால் நாட்டுக்கு.........

இரா: நாசகாலம் அடுத்து விட்டது. அதற்கு அஸ்திவாரம் எழுப்பிவிட்டான் அரசன். பார் ! தாரகை உருகி மறைவதை. கேள் ! ஆந்தையின் அபசகுன அலறல் (தீடீரென எழுந்து உடல் பதற) நிர்மலா, அதோ பார் ! பிரசன்ன தேவியை ! இரத்த தாலமும் கத்தியும் சூலமும் கையிலேந்தி "காவலன் குடும்பத்தையே கருவறுக்கிறேன்" என்று கோர தாண்டவம் செய்வதைப்பார் !

ராணி: (ராணி நிர்மலா மெய்சிலிர்த்து உடல்பதற இராகுலன் காட்டிய சூன்ய வெளியைநோக்கி முழங்காலிட்டு)

தேவி, மதியிழந்த மன்னனை மன்னித்துவிடு! தாயே, மன்னன் செய்த மடமைக்கு இந்த மாநிலத்தையே அழிக்க திருவுள்ளம் கொள்ளாதே. நிறுத்து உன் உக்ரதாண்டவத்தை. உலகமே எதிர்த்தாலும் உன் இரத்ததாகத்தை தீர்க்க நானிருக்கிறேன்.

**இரா :** (ஓங்க சிரித்து) நிர்மலா, பார்! தேவியின் புன் முறுவலை !, பார் ! தாயின் ஆனந்த தாண்டவத்தை !, இப்போது பார் ! தாயின் திருவுருவம் ஜோதி பிளம்பாய் மறைவதை !

**ராணி :** (எழுந்து இராகுலனை வணங்கி) குருதேவா, உலக பிரளயத்தைத் தடுத்துவிட்டீர்கள் ! (கம்பீரமுடன்) இதோ பிரகடனப் பத்திரிகை! அரசனின் உயிர் பலி பிரகடனத்தை மாற்றி அமைத்திருக்கிறேன். தங்களுக்கு எதிராக துணிந்தோட இனி ஒருவனும் துணியமாட்டான் ! என்னை ஆசீர்வதியுங்கள்.

**இரா :** மகளே, மகிழ்ச்சியுற்றோம். உன்னால் வேதங்களும் சாஸ்திரங்களும் புனிதமடைந்தது. ஆனால் நிர்மலா, தன் சிவந்த நாக்கை தொங்கவிட்டு துடித்துக்கொண்டிருக்கும் பராசக்தியின் இரத்ததாகம் தீர்க்க உடனடியாக உயிர்பிராணிகளை அனுப்பிவிடு. நான் வருகிறேன். ஜேய் தேவி பராசக்தி. (மறைகிறான்.)

**காட்சி மாற்றம்** — **அரண்மனை தோட்டம்**

**[வந்துகொண்டிருக்கும் ராஜகுருவை சேனாதிபதி மகேந்திரன் சந்திக்கிறான்.]**

**மகேந் :** நமஸ்காரம் குருதேவா !

**இரா :** சந்தோஷம். எமது பேரிலும் அன்னை காளிதேவி பேரிலும் உனக்கிருக்கும் எல்லையற்ற பக்தியைக் கண்டு யாம் பெரிதும் மகிழ்ச்சி கொள்ளுகிறோம். தீர்க்காயுசாக இரு மகனே !

மகேந்: ஸ்வாமி, சூரிய உதயத்திற்கு முன்னதாகவே ராணி யின் பூஜா வரிசைகள் கோவிலே அணுகிவிடும். மன்னன் விபரம் அறிந்து வருவதற்குமுன் காளி தேவிக்கு இரத்த நிவேதனம் அளித்துவிட வேண்டும்.

இரா: ஒருக்கால் மன்னன் முந்திவிட்டால்?......

மகேந்: பலியைதடுக்க படை உதவியை என்னிடம் எதிர் பார்ப்பார்! ஆனல் பலி நடந்தேதீரும்.

இரா: சபாஷ்! மகேந்திரா, உன் சகோதரி ராணி நிர்மலா தேவி உயிர்பலி பிரகடனத்தை மாற்றி அமைத்தாள், நீ அதை செயலில் காட்டவேண்டும். உலகைக் காக்கும் அன்னையின் விரோதி யாராயிருந்தாலும் அவனை முறியடிப்பது நமது கடமை. தேவியின் கிருபாகடாட்சம் உனக்கு பரிபூரணமாக கிடைக்கும். தைரியமுடன் போய்வா.

(இருவரும் வெவ்வேறு வழி பிரிந்து செல்கின்றனர்.)

காட்சி மாற்றம் கோவில் உட்புறம்

[ இராகுலன் நிம்மதியின்றி உலவிக்கொண்டிருக்கிறன். சந்திரன் வருகை. திரை மறைவில் சண்டிகா தேவிக்கு ஜே! மஹாராணி நிர்மலா தேவிக்கு ஜே! என பணியாட்கள் சப்தம்.]

சந்தி: குருதேவா, பலிகொடுக்க ஆடுமாடுகளை விரட்டிவரும் ராணியின் பணியாட்கள் சப்தம் காதில் விழுகிறது.

இரா: துரிதப்படுத்து. பூஜைக்கு தயாராக இரு.

சந்தி: சகலதும் தயாராக இருக்கின்றன.

(ஜீவகன், சேனதிபதி மகேந்திரன், சேவர்கள் வருகை.)

ஜீவ: (கோபமாக) குருதேவா, எமது உத்தரவை உதாசீனம் செய்ய உங்களுக்கு அவ்வளவு துணிவா!

இரா: ஆம்.

ஜீவ: கோவிலை விட்டு வெளியேற எமது கட்டளை!

இரா: அதையும் உதாசீனம் செய்கிறோம். (வெளியே பார்த்து) பக்தர்களே, தைரியமாக உள்ளே வாருங்கள். இது ராஜகுருவின் கட்டளை!

(வெளியே ஆரவாரம்.)

ஜீவ: நிறுத்துங்கள் உங்கள் ஆரவாரத்தை (நிசப்தம்).

இரா: ஜீவகா, வேதம் ஓதுவோர் வாக்கின் புனிதத்தன்மை மங்கி விடவில்லை. அதன் சக்தி அக்னி ஜ்வாலையாக கிளம்பி உன் அரியாசனத்தையும் அற்ப மகுடத்தையும் தகித்து சாம்பலாக்கப் போகிறதைப் பார்.

சந்தி: குருதேவா, பலிக்கு வேண்டிய ஆடுமாடுகள் தயாராக இருக்கின்றன.

ஜீவ: இன்னும் ஜீவஹிம்சையா!

சந்தி: (மன்னன்முன் மண்டியிட்டு) அரசே, எனது வேண்டுகோளைச் சற்று செவிசாய்த்துக் கேளுங்கள். தேவியின் குறுக்கே நிற்கவேண்டாம்.

இரா: அவமானம், அவமானம், மகா அவமானம் மாகாளி பக்தன் மன்னன்காலைப்பிடித்து மன்றுடுவது! சந்திரா, எழுந்திரு. என்னிடம் மன்னிப்புக்கேள். எமது பரிசுத்த பாதம்தான் மன்னிப்புக்கேட்க உனக்கேற்ற இடம்.

ஜீவ: யாரங்கே! (சேவகன் வருகை) ஆலயத்தில் முக்கால பூஜைகளையும் நிறுத்திவைத்திருப்பதாக பொது மக்களுக்கு பறைசாற்றிவிடு. மகேந்திரா, படை பலம்கொண்டு பலிகளை தடுக்க தயாராக இரு.

மகேந்: மன்னிக்கவேண்டும் மகாராஜ்! அரசனின் சேவகன் அன்னையின்முன் அசக்தனுக இருக்கிறுன்!

**ஜீவ :** விலகிக்கொள். விக்ரமா, படைக்கு தலைமைவகித்து பகிரங்க கொலையான பலியை தடுத்துக்கொள்! சதுரங்கா, ஆடுமாடுகளையும் பணியாட்களையும் நாலா பக்கங்களிலும் சிதறிஅடித்து ஓட்டிவிடு.

**[விக்ரமன் கோவிலை பாதுகாக்க, சதுரங்கன் ஆடுமாடுகளையும் பணியாட்களையும் விரட்டுகிறுன்.]**

**இரா :** ஜீவகா, அரசாங்க சட்டத்தை அவமதிக்காதே. இதோ! ராணி நிர்மலாவின் பிரகடனப் பத்திரிகை!

**ஜீவ :** குருதேவ், அரசனுக்கு எதிராக அரசியை தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கிறீர்? ராணியும் ராஜ குருவும் ஜீவகனின் சர்வ சாதாரண பிரஜைகள் என்பதை மறந்து விடாதீர். (காளியைப் பார்த்து) ஹே பராசக்தி! இனி உனக்கு இரத்த நிவேதனம் இல்லை. இரத்தத்தை விட சிவந்த இந்த புஷ்பங்கள்தான் உனது நிவேதனம். கல்லுருவான உன் கண்களிலிருந்து ஜ்வாலை கிளம்பினுலும், இரத்தம் தோய்ந்த உன் கடகத்தை ஓங்கினுலும், உலகையே அழிக்க உக்ர தாண்டவமாடினுலும் ஹே ஓங்கார காளி! ஒரு துளி இரத்தம் உன் கல்நாவில் ஒட்டவிட மாட்டேன். விக்ரமா, இந்த பாதுகாவல் நாளை காலைவரை நீடிக்கட்டும்.

(மன்னனும் பரிவாரங்களும் மறைகின்றனர்)

காட்சி மாற்றம் — கோவில் பூங்கா

**[இராகுலனும், மகேந்திரனும் பூங்காவில் உட்கார்ந்திருக்கின்றனர்.]**

**இரா :** மாகாளியின் மானங்காத்த மாசற்ற மாவீரனே, மங்களபுரியின் மணிமகுடம் சீக்கிரத்திலே உன் சிரசை சிங்காரிக்கப் போகிறது!

**மகேந்:** எப்படி குருதேவா!

இரா: என் கனவில் தோன்றிய காளியின் கட்டளை இது.

மகேந்: நான் கண்டிப்பாக அரசன் ஆவேனா? ...... ஒருக்கால் சந்தர்ப்பங்கள் மாறிவிட்டால்.

இரா: மாறுவதற்கு இடமில்லை மகேந்திரா, மனக்கவலையை விடு.

மகேந்: அப்படியானால் நான் என்று அரசனாவேன்? மன்னர் எப்போது பட்டத்தை துறப்பார்?

இரா: அது தேவியைத்தான் கேட்க வேண்டும். ஆனால் இப்போது அவள் தன் தாகத்தைத் தணிக்க இராஜ வம்சத்து இரத்தத்தை வேண்டுகிறாள்.

மகேந்: இராஜ வம்ச இரத்தமா!

இரா: ஆம். அதுவும் உன்னையால் ஊட்டப்பட வேண்டுமாம் நீ மகுடம் தரிப்பதற்குமுன்!

மகேந்: இராஜ வம்ச இரத்தம்! எங்கே கிடைக்கும்! நான் எப்படி கொண்டு வருவது!

இரா: இதுதானா பிரமாதம் இருக்கவே இருக்கிறான் மன்னன் ஜீவகன்.

மகேந்: (ஆத்திரமுடன்) குருதேவா! ?

இரா: நில். ஆத்திரப்படாதே......... அவனை ரகசியமாகக் கொன்று சூடு ஆறுவதற்கு முன் அவன் கொதிக்கும் இரத்தத்தைக் கொண்டு வந்து சண்டிகா தேவியின் பலி பீடத்தில் அர்ப்பணித்துவிடு. நீயும் மன்னனாகலாம். காளிதேவியும், நாடும், மக்களும், நானும் நீயும் சுபீட்சமாக இருக்கலாம்!

மகேந்: குருதேவா, மன்னன் என் சகோதரியின் கணவரல்லவா! அரியாசனத்தில் அமர்ந்துகொண்டு அமங்கலி ரூபத்திலா என் சகோதரியை நான் பார்க்க வேண்டும்.

இரா: மகேந்திரா, அரசன் வேண்டுமா? அரியாசனம் வேண்டுமா?

மகேந்: எனக்கு அரச பதம் வேண்டாம் குருதேவா !

இரா : நீ அரியணையில் அமர்ந்துதான் ஆக வேண்டும். இதி லிருந்து தப்பமுடியாது. இது காளி தேவியின் கட் டளை. மன்னன் உயிருடன் இருக்கவேண்டுமானுல் நீ சாகத்தயாராக வேண்டும்.

மகேந்: இரக்கம் காட்டவேண்டும் சுவாமி !

இரா : காளியின் கட்டளையை நிறைவேற்ருத வரை நீ மன நிம்மதியுடன் இருக்க முடியாது மகேந்திரா. தேவி யின் திருஉள்ளத்தை திருப்தி செய்துதான் ஆக வேண்டும். இந்த ஒரு அற்ப விஷயத்தை செய்து முடிக்க உனக்கு ஆணவம் இல்லையென்ருல் நாளை மங்களபுரி சிம்மாசனத்தில் அமர்ந்துகொண்டு இந்த பரந்த உலகத்தை எப்படி ஆளப்போகிருய். மேலும் அரியாசனத்தை அபகரிக்க விரோதி அணுகிவிட் டான். அவனையும் ஒழித்து ஆசனத்தை காப் பாற்றுவது உனது கடமை என்பதை மறந்து விடாதே.

மகேந்: விரோதியா ! யார் ?

இரா : உன் பக்கத்திலே, உன் கைக்குள்ளே இருக்கிருன் அவன். மகேந்திரனுக்கு உரிமையான மங்களபுரி மணிமகுடம் மன்னன் மார்பில் வளர்ந்துவரும் மாற்ருன் ஒருவனுக்காக காத்துக் கொண்டிருக்கிறது — அவன்தான் — அரசனின் தத்துப்புத்திரன் ! உதயணன் !

மகேந்: உதயணனையே பலிகொடுத்து விட்டால் என்ன சுவாமி !

இரா : தேவியின் விருப்பம் அரசனின் மேல் அல்லவா ?

மகேந்: அப்படியானுல் அரசனுக்காக வேண்டி உதயணன் கண்டிப்பாய் சாகத்தான் வேண்டும். அரசர் தன் உயிரைவிட அவனை மேலாகக் கருதுகிருர். ஆகவே உதயணன் உயிர் அரசரைவிட மேலாகக் கருதப்படு

கிறது. எனவே காளி தேவியும் உதயணன் உதிரத்தை இதய பூர்வமாக ஸ்வீகரித்துக்கொள்ள இடமிருக்கிறது.

இரா: (சிந்தித்து) மெச்சத்தகுந்த விஷயம். ஆனால் இதை செய்து முடிப்பது?

மகேந்: அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.

இரா: அத்துடன் அன்னைக்கு ஏற்பட்ட மற்ற பலிகளையும் ரகசியமாகவே கொடுத்துவிடுவோம். இவ்வளவும் நாளை சூரியோதயத்திற்குள் நடந்தாக வேண்டும்... ...தைரியமாகச் செல்.
(மகேந்திரன் தயங்கி நிற்கிறான்) மகேந்திரா, என் தயக்கம்?

மகே: ஏதோ ஒரு நிழல் நம்மைக் கடந்துசெல்கிறது ஸ்வாமி!

இரா: அது உன் பயத்தின் சாயல்!

மகே: அதோ காலடிகளின் சப்தம்.

இரா: அது உன் பலவீன இதயத்துடிப்பின் சப்தம்! மகேந்திரா சித்தத்தை சிதறச்செய்யும் சிந்தனைகளை கிள்ளி எறிந்துவிடு—இதோ இந்த மதுரமான மதுவை அருந்து மாகாளியின் பெயரால். தேவியின் கிருபா கடாக்ஷம் உனக்கு பரிபூரணமாகக் கிடைக்கட்டும். ஒவ்வொரு விஷயமும் சிந்தனையிலிருக்கும் போது பயங்கரமாகத்தான் தோன்றும். (மகேந்திரன் மதுவருந்தி மௌனமாக இருக்கிறான்) மகேந்திரா, உன் மௌனம் எதைக் குறிக்கிறது?

மகே: பலிகொடுப்பதை நாளை மாற்றிக்கொண்டால் என்ன ஸ்வாமி!

இரா: (சிரித்து) மதுஉண்ட மயக்கத்தில் பேசுகிறாயோ?

மகே: கட்டுக்காவல் பலமாக இருக்கிறதே!

இரா: காளியின் சக்தி கையிலிருக்கும்போது! ஓம் காளி! இதோ கட்கம் (மகேந்திரன் கத்தியை வாங்க) தைரியமாகச் சென்றுவா. ஜெய் தேவி பராசக்தி!

(மகேந்திரன் மறைகிருன்.)

[இந்த சம்பவத்தை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சந்திரன் வருகை].

சந்தி: குருதேவா, என்ன பயங்கர நீதி இது! இரக்க உள்ளம்படைத்த காளியின் கட்டளேயா இது!

இரா: தேவியை திருப்திசெய்ய வேறு வழியில்லேயே சந்திரா!

சந்தி: தேவியைத் திருப்திசெய்ய இவ்வளவுபெரிய பாப மூட்டையை சுமக்கவேண்டுமா சுவாமி!

இரா: பாபம்! பாபத்தைப்பற்றி என்னேவிட நீ என்ன தெரிந்துகொண்டாய். பொருளே தவருக புரிந்து கொண்டிருக்கிருய் மகனே. பாபம் என்ற பதத்திற்கு அர்த்தமே கிடையாது. கொல்லுவதும் பாபமல்ல. அதற்கு விளக்கமும் இல்லே. பாபம் என்பது எம்மவர்கள் அகராதியில்மட்டும் காணப்படும் பதம். அது எங்கள் பிழைக்கும் வழி. தம்மை தற்காத்துக் கொள்ள எம்மவர்களால் கட்டப்பட்ட அரண்தான் பாபம் எனப்படும்பதம். சந்திரா, ஆண்டவன் சிருஷ்டியில் பாபம்என்ற பதத்திற்கு இடம்உண்டென்ருல் ஒரு உயிருக்கு மறு உயிர் உணவாகமுடியுமா! பாபம் எனும் அச்சுக் கோலில்தான் உலகம் எனும் சக்கரம் சுழன்றுகொண்டிருக்கிறது. சதா பக்தியிலே மூழ்கிக் கிடக்கும் நாங்கள் எங்கள் தேவைகளுக்காக எதையும் செய்ய தயங்கமாட்டோம்....

சந்தி: நிறுத்துங்கள் குருதேவா! தங்கள் கூற்று உண்மையானல் இரக்கம், அன்பு இவைகள் அலங்காரப் பதங்களா! தயவு, தாட்சண்யம் இவைகள் வெறும்

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE 1|2|51

பித்தலாட்டங்களா! என் சக்தியற்ற இதயத்தின் மேல் நின்று விளையாடாதீர்கள். நிலைகலங்கி இருக்கும் என் நெஞ்சை ஏன் சுக்குநூறாய் ஒடித்தெறிகிறீர்கள்? தேவியின் இரத்த தாகம் தீர்க்க என்னையே தியாகம் செய்து கொள்ள அனுமதி தாருங்கள்.

இரா: (கோபமாக) மகனே, உனக்காக நர பலிகளை நிறுத்திவிட்டோம்!

சந்தி: நிறுத்தித்தான் ஆகவேண்டும். (மனம் மாறி) இல்லை வேண்டாம் குருதேவா! என் அறியாமைக்கு மன்னிப்பு. மனித இதயத்தில் பிறக்கும் நிலையற்ற சட்டங்களுக்காக வேதங்கள் இயற்றிய புனித சட்டதிட்டங்களை மாற்றி அமைக்கவேண்டாம். தன்மைகளை தாங்கள்தான் அறிவீர்கள். தேவா, இப்பொழுதாவது உண்மையைச் சொல்லுங்கள். அன்னை பராசக்தி அரசவம்ச இரத்தத்தை விரும்புகிறாளா?

இரா: மகனே, எம்மீதுள்ள நம்பிக்கையை இழந்துவிட்டாய்!

சந்தி: மன்னிக்கவேண்டும் சுவாமி. அன்னை அரச வம்ச இரத்தம்தான் வேண்டுமென்று விரும்பினால் அவள் ஆவலைத்தீர்க்க நானிருக்கிறேன். நான் கொண்டு வருகிறேன் இராஜவம்சத்து இரத்தம். ஆனால் மன்னனைக் கொல்ல மகேந்திரனை தூண்ட வேண்டாம்.

இரா: தேவியின் விருப்பப்படி நடப்பதில் குற்றமொன்றுமில்லையே!

சந்தி: இல்லை. ஆனால் அவள் இச்சையை பூர்த்தி செய்யும் அந்த புனித கைங்கர்யத்தை நானே ஏற்றுக்கொள்ளுகிறேன்.

இரா: மகனே, உன்னை குழந்தைப் பருவமுதல் என் இதயத்தில் வைத்து வளர்த்து வருகிறேன். எந்த காரணம் கொண்டும் உன்னை இழக்க முடியாது.

சந்தி : குருதேவா, என் மீது தங்களுக்கிருக்கும் அன்பு பாபத்தால் கறைபடுத்தப்பட நான் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டேன். மகேந்திரனை அவர் பிரதிக்ஞையிலிருந்து விடுவித்து விடுங்கள்.

இரா : சிந்திப்போம்......ஆனால் உன்மீதுள்ள அன்பு சகலத்தையும் கடந்து நிற்கிறது மகனே.

சந்தி : அன்பைப்பற்றி என்னிடம் பேசாதீர்கள் சுவாமி. அன்பு தோன்றிமறையும் மின்னலுக்குச் சமானம். நொடிப்பொழுதில் வாழ்க்கையை சித்தரித்து மறையும் கனவுக்குச் சமானம். கடமையைப்பற்றி பேசுங்கள். ஆழ்கடலின் அடிமட்டத்திலே உறைந்து கிடக்கும் பாறை கூட்டங்களுக்குச் சமமான கடமையைப்பற்றி பேசுங்கள்.

இரா : சந்திரா, சிறிது ஓய்வு எடுத்துக்கொள். குழம்பிய உள்ளம் தெளிவு பெறட்டும்.

காட்சி மாற்றம் வெட்டவெளி

[ஆகாயத்தை நோக்கி இருகைகளையும் அகல விரித்துக்கொண்டு சந்திரன் நிற்கிறன்]

சந்தி : பயங்கரத்தாயே, என் குழந்தைப்பருவ முதல் உனக்கு சேவை செய்து வருகிறேன்! இன்னும் உன் உள்ளத்தை உணர முடியவில்லையே! இரக்கமென்பது மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் மட்டும்தான் உரித்தானதா? உன் போன்ற தெய்வங்களுக்கில்லையா? குருபக்தி, தெய்வபக்தி, இராஜபக்தி என்னும் மூன்று ஈட்டி முனைகளால் நான் சித்திரவதை செய்யப்படுகிறேனே! குருபக்தி காவலனைக் கொல்லத் தூண்டுகிறது, இராஜ பக்தி இராஜ்குருவை எதிர்க்கச் செய்கிறது. இதற்கிடையில் தெய்வசக்தி செயலற்று நிற்கிறது! (ரோகிணி வருகை)

ரோகி : சந்திரா

சந்தி : வா ரோகிணி.

ரோகி : ஏன் இவ்வாறு சோபை இழந்திருக்கிறது உன் முகம்! நான் சதா தெய்வ நிந்தனை செய்து கொண்டிருக்கிறேன் என்று எண்ணுகிறாயா! சந்திரா, தெய்வங்களின் உதவி இல்லாவிட்டால் நாம் உலகில் வாழ முடியாது என்று முடிவு கட்டிவிட்டாயா? நர்த்தன மாடும் நாரீமணிகளும், அழகிய அப்சரசுகளும் கோகிலகான கோமளாங்கிகளும் கூட்டம் கூட்டமாக மலிந்து கிடக்கும் பிரமாண்டமான தேவலோகத்தை விட்டு மனிதவர்கத்தின் இரத்தம் குடிப்பதற்கென்றே தெய்வங்கள் பூலோகத்தில் இறங்கி தெருத் தெருவாய் குடியேறிவிட்டார்கள். நமது நாட்டின் படை வலிமைவிட, மக்களைவிட பதின்மடங்கு பெருகிவிட்டார்கள் எண்ணிக்கையில். ஆனால் அதே எண்ணிக்கை இன்று குறைந்து கொண்டே வருகிறது. மக்கள் முன்னேறி விட்டார்கள். மனிதவர்கத்தை மடையர்களாக்கி வந்த தெய்வங்களின் மாளிகைகளை இரட்டை பூட்டிட்டு அவர்களை கொன்று குவித்து வருகிறார்கள் இன்றைய மக்கள். இன்றைக்கில்லாவிட்டாலும் என்றாவது ஒரு நாள் இந்த காளியின் கல்லுருவம் கலைக்கோயிலின் காட்சி பொருளாகமாறும் காலம் வந்தே தீரும். சந்திரா, உன் இரக்க உள்ளமும், வசீகர சக்தியும், வீர உருவமும் கேவலம் எண்ணெய் வழியும் கருங்கல் முன்னிலையிலா பாழாக்கப்படவேண்டும்! மனித சமூகத்தின் வைரி, விஷஜந்து பூஜாரியின் பாபக் கறை படிந்த பாதங்களிலா உன் பசும் கரங்கள்பட வேண்டும்! நீதியும் நேர்மையுமற்ற அந்த நீசனின் நெஞ்சத்திலா உன் நிமிர்ந்த தலைசாய வேண்டும்! ஈவு இரக்க மற்ற அவன் இதயத்தோடா உன் இன்ப இதயம் ஒன்றுபட கலர வேண்டும். சந்திரா!

இதோ என்னைப்பார்! என் முகத்தைப்பார்! கருங்கல் காளியின் கடும் முகத்தை என் முகத்தோடு ஒப்பிட்டுப்பார்! உணர்ச்சியற்ற அந்த உருவத்தை மறந்துவிடு. இதோ! என் மலர் கரங்களை தொடு! உண்மை உள்ளங்கள் ஊடுருவிப்பாய்வதை உணர்வாய்! "வாழ்க்கை வாழ்வதற்கே" என்று, என்னுடன் வாழ வழி வகுப்பாய்!......சந்திரா, என் மௌனம்! ஆலயத்தைவிட்டே என்னுடன் வந்துவிடு. மனிதப் பிறவியிலே சுகம் எங்கேயிருக்கிறது? பக்தி, தியாகம் எங்கேயிருக்கிறது? கடமை, வீரம் எங்கே யிருக்கிறது? சொர்க்க உலகம் எங்கே சிருஷ்டிக்கப்படுகிறது என்பதை நீயாகவே அறிந்து கொள்வாய். வா சந்திரா!

சந்தி: அருகில் நெருங்காதே. ஆலயத்தைவிட்டு நான் வர முடியாது ரோகினி. கடமை எனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. (நகாகிறான்)

ரோகி: நில் சந்திரா. அதோ பார் பணியாமலைகளின் சிகரங்கள் நீலவானை முத்தமிடுவதை! கோதை ஆற்றை பார், நீலத்திரை கடலுடன் ஐக்கியமாவதை! அதோபார், வானமும் வையமும் அடிவானத்தில் ஒன்றையொன்று தொட்டு கிடப்பதை! இதோ, செடியும் கொடியும் பிணைந்து வளர்வதைப்பார்! எவ்வளவு அற்புதமான உலகம். இயற்கையில், ஒவ்வொன்றும் தனிமையாக இருக்கக் காணவில்லையே! யாவும் ஒன்றுடன் ஒன்று கலந்துதானே இருக்கிறது! அப்படி இருக்க சந்திரா, நீ மட்டும் ஏன் என்னுடன் இணைந்திருக்கலாகாது!

சந்தி: ரோகிணி, இத்தனையும் கவிகளின் கற்பனைக் கூற்று. தன் கற்பனையின் சக்தியால் கவி மனித வர்க்கத்தை ஆட்டுவிக்கிறான். நீ புகழும் பணியா மலைகளின் சிகரங்களில் ஏறி பார் அவை நீலவானை முத்தமிடுகின்றனவா என்று! வெட்ட வெளியைப் பார்த்து

விரைந்து போ. போமளவும் போ. வானமும் வையமும் ஒன்றுபட கலந்து கிடக்கும் அடி வானத்தை அடைய முடியுமா என்று பார்!

ரோகி: ஆகாயத்தில் வர்ண ஜாலங்களைப் பார்! பக்ஷி ஜாலங்களின் கொஞ்சல்களை கேள்! — இதோ உன் ரோகிணியின் இதயத்திலிருந்து எழும் இனிய நாதத்திலே மயங்கு. அதிலே அவள் சிருஷ்டித்த இன்ப உலகைக் காண்பாய். அவள் கொடுக்கும் இன்ப லாகிரியை உண்டு என்றும் பால்யனாகவே இரு—சந்திரா, என் இதயத் துடிப்பின் இனிய அலை ஓசை உன் செவிகளில் கேட்கவில்லையா?

சந்தி: குருநாதரின் ஓங்கார சப்தத்தை ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் என் செவிகள் உனது இதயத் துடிப்பை எவ்வாறு கேட்க முடியும்?

ரோகி: உன் இதய கமலத்தில் ஒண்டி இருக்க ஒரு சிறு பகுதியைத் தானே கேட்கிறேன் சந்திரா!

சந்தி: கமலம் இன்னும் மலரவில்லையே ரோகிணி!

ரோகி: மலரச் செய்கிறேன் சந்திரா!

சந்தி: சிதைந்து விடுமே அம்மா!

ரோகி: ஓவியத்தில் எழுத முடியாத உனது சௌந்தர்ய உருவத்தை ..........

சந்தி: உளியால் உருவாக்கித் தருகிறேன்.

ரோகி: உருபெற்றும் உயிரற்ற கல்லுக்கு உணர்ச்சி ஏது சந்திரா! பெண் என்றால் பேயும் இரங்குமே!

சந்தி: இனம் இனத்தோடுதானே சேரும்!

ரோகி: எண்ணங்களை அலை மோதவிடாதே! என்னுடன் புறப்படு. எங்கேயாவது போய்விடலாம்!

(கோவில் கண்டாமணி அடிக்கும் சப்தம் கேட்கிறது.)

சந்தி : (மனம் தடுமாறுகிறது) என்னைவிட்டு அகன்றுவிடு. போ - போ ........

(வேட்டவெளியை விட்டு ஓடுகிறான்.)

காட்சி மாற்றம் இராஜபாதை

[மது அருந்திய மகேந்திரன் மனம் குழம்பி தள்ளாடி வருகிறான். மனதிற்கும் அவனுக்கும் போராட்டம்.]

மனம் : நில் மகேந்திரா ! எங்கே செல்கிறாய் ?

மகே : மன்னனின் இரத்தம் கொண்டுவர !

மனம் : மன்னனின் இரத்தமா ? மன்னன் மைந்தனின் இரத்தமா ?

மகே : அது சந்தர்ப்பம் எனக்களிக்கும் வரவேற்பை பொருத்தது.

மனம் : அரச இரத்தத்தின் அவசியம்.

மகே : அன்னையின் ஆவலை தீர்க்க.

மனம் : இல்லை மங்களபுரியின் மணிமகுடத்தைப் பறிக்க, மன்னன் வம்சத்தைக் கருவருக்க மதகுரு வகுத்த சதித்திட்டத்தை செயலில் காணச்செல்கிறாய் என்று சொல்.

மகே : அது உண்மையானால் செயலாற்ற சந்திரனையே அனுப்பியிருக்கலாமே ?

மனம் : சந்திரன் மண்ணாசை அற்றவன்.

மகே : தானே நேரில் செல்லலாமே.

மனம் : செல்லமாட்டான் மகேந்திரா. மக்களுக்கு மத போதையை ஊட்டி மண்டலாதிபதிகளாகும் மடத் தலைவர்களும் மத குருக்களும் திரை மறைவிலிருந்து தான் தங்கள் அக்ரமச் செயல்களை நடத்துவார்கள்.

மனித இனத்திற்கே தன்னை தலைவனாக்கிக் கொள்ள வேதங்கள் மூலம் காளியைக் காட்டி காவலனைக் கொல்ல இராகுலன் தோண்டிய சதிக் கிடங்கில் நீ விழுந்துவிட்டாய். மதுவுண்ட மயக்கம் மங்கிய பின் உன் குறிக்கோள் நேர்மைதானா என்று சீர் தூக்கி சிந்தித்துப் பார். உண்மையில் சொல். காளியின் ஆவலைத் தீர்க்க காவலனைக் கொல்லச் செல்கிறாயா! மங்களபுரியின் மகுடம் அடைய மன்னனை மாய்க்கச் செல்கிறாயா! அல்லது வேத குருவின் விஷ ஜுவாலையைக் கக்கும் கொடுங் கண்களுக்கு பயந்து வேந்தனை வீழ்த்தச் செல்கிறாயா! இராஜகுருவின் பாபச் செயலுக்கு தலையசைத்து நாசமடையாதே.

(மகேந்திரன் தயங்கித் தள்ளாடி செல்கிறான்.)

காட்சி மாற்றம் — அரண்மனை

[மகேந்திரன் தன் கையை தூணில் தாங்கி தலை கவிழ்ந்து நிற்க ராணி நிர்மலா வருகை.]

**ராணி :** அண்ணா, ஏன் இந்த மௌன நிலை!

**மகே :** இந்த நாட்டின் அரியணை எனக்கு அவசியம் தானா? அதற்கு நான் அருகதைதானா? என்று .........

**ராணி :** கனவு கண்டு கொண்டிருக்கிறாயோ! (சிரிக்கிறாள்) நாட்டையாளும் மன்னன் என் கணவர் இருக்க இந்த பிரச்சனைக்கே இடமில்லையே அண்ணா.

**மகே :** இது என் ஆசையல்ல சகோதரி.

**ராணி :** பின்?

**மகே :** குருதேவர் மூலம் அன்னையின் ஆக்ஞை.

**ராணி :** நாடாளவா?

மகே : ஆம்

ராணி : என் மன்னர்?

மகே : அதைத்தான் சிந்தித்துக்கொண்டிருந்தேன்.

ராணி : சிந்தனைக்கு இடம் கொடாதே அண்ணா, சீரழிந்து விடுவாய். மன்னர் அன்னையின் விரோதியானாலும் என் கணவர் என்பதை மறந்து விடாதே. அவர் சிரதலத்தை சிங்காரிக்கும் வெற்றி கிரீடத்தை விளை பொருளாக மதித்துவிடாதே! நீதி வழங்கும் அவர் செங்கோலை கன்னக்கோலாகக் கருதிவிடாதே! அமர்ந்து அகிலமாளும் அவர் அரியணையை சொகுசு பீடமாக நினைத்து விடாதே! ஏன் அண்ணா! உனக்கேன் இந்த திடீர் எண்ணம்?

மகே : எண்ணம் என்னுடையதல்ல சகோதரி. அன்னையின் ஆவலாம்! அர்ச்சகரின் ஆக்ஞை. சீக்கிரமே நான் முடிசூடவேண்டுமாம்! அதற்குள் அரச வம்ச இரத்தம் என்கையால் ஊட்டப்படவேண்டுமாம் எம தன்னைக்கு!

ராணி : (மனம்குழம்பி) அரச வம்ச இரத்தமென்றால்?...

மகே : அரசரையேக் கொன்று அவர் கொதிக்கும் இரத்தத்தை அன்னைக்கு அர்பணிக்கவேண்டுமாம்!

ராணி : (கோபமீறி) அரசரைக்கொன்று!.........அரசரின் இரத்தம் யாசிக்குமளவுக்கு அன்னையை அரக்கியாக்கிவிட்டாரா குருதேவர்! மாயாஜாலத்தைக் காட்டி மன்னனின் கோபத்திற்கு என்னை ஆளாக்கி உன்னையும் மடயனாக்கி விட்டார் அண்ணா. நான் தான் தவறிவிட்டேன் என்றால் உன்மதியுமா குருடாகி விட்டது (மகேந்திரன் கையிலிருந்து கத்தி நழுவி விழுவதை ராணி கவனிக்கிறாள) அரசரைக் கொல்ல ஆயுதம் கொடுத்தனுப்பும் அளவிற்கு ஆணவம் பிறந்து விட்டதா அந்த அர்ச்சகனுக்கு?

அண்டி பிழைக்கவந்த அனகரீக அர்ச்சகன் அரச குருவாகி அரசரையே கொல்லச் சதி திட்டம் தீட்டி விட்டானா? அண்ணா, மங்களபுரியின் மகாராணி என்ற முறையில் கட்டளையிடுகிறேன், அந்த அதமனை உன் கையாலேயே பிணைத்து இழுத்து வா.

(திரை மறைவிலிருந்த மன்னர் பிரவேசம்)

ராணி : (ஓடிச்சென்று கட்டி பிடித்து) அரசே என்னை மன்னியுங்கள். அன்னை மீதிருந்த பக்தியால் அர்ச்சகனை நம்பி நடந்தேன். அது தங்களை அன்னையின் பலிபீடம் வரை இழுத்துச்செல்லும் என்று எண்ணவில்லை. இன்றுவரை எவனை அன்னையின் பிரதிநிதியாக மதித்து நடந்து வந்தேனோ அந்தக் கயவனே இன்று தங்களைக்கொல்ல என் அண்ணனை அனுப்பியிருக்கிறான்.

ஜீவ : யாவும் அறிவோம்......நிர்மலா, அர்ச்சகனின் அநாகரீகச் செயல்களுக்கு அடிமைப்பட்டு அரசனையே புறக்கணித்த நீ, இன்று அரசனின் உயிருக்கு பரிந்து அர்ச்சகனையே அதம் செய்ய திட்டமிடுவது விசித்திரமாயிருக்கிறது. அரசனின் இரத்தத்தை அன்னை வேண்டினால் அதை நீயல்லவா உன் கையால் அவளுக்கு ஊட்டவேண்டும். உன்பக்திக்கே களங்கத்தை உண்டு பண்ணிவிட்டாய்! மாகாளி இந்த மாநிலத்தையே மயானமாக்கிவிடுவாளே!

ராணி : (கண்ணீர் வடிய) என்னை சித்திரவதை செய்யாதேயுங்கள் அரசே. என் அறிவுக்கண்களை மறைத்திருந்த அஞ்ஞானத்திரை விலகிவிட்டது. என்னை மன்னித்துவிடுங்கள் பிரபு!

ஜீவ : (நடுநடுங்கி ஒதுங்கி நிற்கும் மகேந்திரனைப் பார்த்து) மகேந்திரா மங்களபுரியின் மன்னன் குடும்பத்தை பூண்டுடன் கிள்ளி எறிய எத்தனை காலமாக திட்டம்

வருத்துக் கொண்டிருக்கிருய்? இதனுல் தான் முன்னேற்பாட்டுடன் படை வலியுடன் பலியைத் தடுக்க பின்வாங்கி விட்டாயோ!

மகே : இந்த ஏழையை மன்னித்து விடுங்கள் அரசே! இராகுலனின் தாட்சண்யமற்ற செய்கை சதி சூழ்ச்சியில் பின்னிக் கிடந்ததை இன்றுதான் உணர்ந்தேன். மாகாளியின் கட்டளையென மங்களபுரி மணி மகுடத்தைக் காட்டி மன்னனைக் கொல்ல மன்ருடினுன்—மறுத்தேன்; குமுறினுன் — கலங்கினேன்; மதுவை ஊட்டினுன்—மயங்கினேன். மன்னன் மகனைக் கேட்டு, கையிலே கட்கத்தைக் கொடுத்து காளிநாமம் ஜபித்தான்! ...... விரைவாக நடந்தேன். உடலிலே தடுமாற்றம்—உள்ளத்திலே போராட்டம். மாளிகை அடைந்தேன்; மயக்கம் தெளிந்து மகாராணியிடம் நடந்ததை விளக்கினேன்.

ஜீவ : யாரங்கே! (சேவகன் வருகை) சூரிய உதயம் வரை கோட்டை கதவுகள் அடைக்கப்பட்டு போக்குவரத்து தடைசெய்யப் படவேண்டும். பாதுகாவல் பலமாக இருக்கட்டும். (சேவகன் மறைதல்) நிர்மலா, வா.

காட்சி மாற்றம் — காளி கோவில்

**[இராகுலன் ஆலயப் படிகளில் கவலைக் குறியோடு காணப்படுகிருன். சந்திரன் கற்தூணில் சாய்ந்து நிற்கிருன்.]**

இரா : சந்திரா, உதய சூரியனின் ஒளிமிக்கத் தங்க கிரணங்கள் அன்னையின் ஆலய கலசத்தை அலங்கரிப்பதற்கு முன் மன்னனின் இரத்தத்தைக் கொண்டு வருவதாக மார்தட்டிச் சென்ற மகேந்திரன் இதுவரையும் திரும்பவில்லை. மர்மம் புரியவில்லை ...... மன்னனை மாய்க்க மாகாளி தந்த ஆயுதம் முனை

மழுங்கிவிட்டதா! அல்லது மன்னனின் சாகசத்தில் மயங்கி விட்டானு மகேந்திரன்! ............ மஹா மாயாவின் மனம் குளிர மன்னன் உதிரத்தைக் கொண்டுவரும் பொருப்பு இனி உன்னுடையது. போ சீக்கிரம்!

[சந்திரன் மறு மொழி பேசாமல் காளியின் முன் கிடக்கும் கத்தியை ஏந்தி விரைவாக வெளிச் செல்கிருன்]

இரா: (ஓங்கி சிரித்து) ஜேய் தேவி பராசக்தி! இனி என் மனம் நிம்மதி அடைந்தது........சந்திரன் திரும்பி வராவிட்டால் ?...... ஒருக்கால் விரோதியின் கையில் அகப்பட்டு உயிரிழக்க நேர்ந்தால் ? (காளியைப் பார்த்து) ஏ சண்டிகா! அந்த அவமானம் உன்னைத்தான் சேரும். உன் விரோதிகளே உன்னைப் பார்த்து எக்களிப்பார்கள் ......... என்ன! காலடிகளின் சப்தம்! இவ்வளவு சீக்கிரமா! ஒருக்கால் தோல்வியுடன் திரும்பி வருகிருனு !....... இல்லை வெற்றியுடன்தான் திரும்புவான்.

(சந்திரன் வருகை)

சந்திரா, எங்கே இரத்தம்!

சந்தி: அது என்னிடமே இருக்கிறது! என் கைகளால் தேவிக்கு நானே அதை அர்ப்பணம் செய்வேன். குருதேவா! பாபத்திற்கு விளக்கம் கொடுத்தீர் அப்படி ஒரு பதம் இல்லை என்று. இரக்கம் என்ற பதம் உங்கள் ஏளனத்திற்கு இலக்காகியது. கொலை குழந்தை விளையாட்டாகவும்; களவும், கபடமும் கை தேர்ந்த கலைகளாகவும் உங்களால் கௌரவிக்கப்படுகின்றன. மதுவை மதியை வளர்க்கும் மருந்தாக மதித்தீர். இவைகளே நான் தங்களிடம் பெற்றுக் கொண்ட உபதேசங்கள்! இத்தனையும் ஒன்ருகச் சேர்த்து ஒரு உருவத்தை எழுப்பினுல், தங்களைத்

தான் பார்க்க முடியும்! வேதபுராணங்களைக் காட்டி என் கடமையைசெய்யத் தூண்டினீர். அந்த கடமைக் காகவே இதுவரை நான் காத்திருந்தேன். அது என் இலட்சியமாகமாறி தியாகத்தில் கொண்டு சேர்த்துவிட்டது. அந்தப் புனிதத் தியாகம்......

இரா: சந்திரா!

சந்தி: குருதேவா!...... எனது இறுதி எச்சரிக்கை! எனது மரண வாக்கு மூலம்! உங்கள் இதயத்தில் பதிய வைத்துக்கொள்ளுங்கள். அன்னையின் அர்ச் சகராக வந்து அரசை அடிமைப்படுத்திய அந்தணன் என ஏடுகள் முறையிட இடம் கொடுக்காதீர்!— பகுத்தறிவற்ற பார்ப்பனர்கள் என பட்டம் சூட்ட பராசக்திக்கு படுகொலையான பலிகளை கொடுத்து பாமர மக்களை பயமுறுத்தாதீர்!–அண்டிப் பிழைக்க வந்த அந்தணன் ஆரிய சூழ்ச்சியால் அரியாசனம் ஏறினான் என்ற அவச்சொல்லுக்கு இடம் கொடுக்கா தீர்! சரித்திர ஏடுகளைப் புரட்டிப்பாருங்கள்! சிவாஜியின் மனக்கோட்டையை சின்னாபின்னமாக் கினான் கெங்குப்பட்டன் — தஞ்சை நாயக்கனை வஞ்சித்தான் வெங்கண்ணா—தன் காலில் தடுக்கிய புல்லை வேருடன் களைந்த சாணக்கியன் நவ நந்த வம்சத்தையே கருவறுத்தான். ஆரிய குருக்களால் தான் அநேக அரியாசனங்கள் அழிந்து மண்ணோடு மண்ணாய் மறைந்த உண்மைகளை ஆரியர்களின் சரித்திரமே கூறுகின்றன!

குருதேவா, நான் தங்களைப்போல் வேத புராண குப்பை மேட்டில் நெளியும் புழுவல்ல! நான் செய் யப் போகும் தியாகம் கடமைக்காக அல்ல! நான் செய்யப்போகும் அர்ப்பணம் அன்னையின் ஆவலை தீர்ப்பதற்கல்ல! "தேவி பராசக்தி", "குருதேவ் இராகுலன்" போன்ற இரத்தத்தை உறிஞ்சும் விஷ

ஜந்துக்கள் உலாவும் உலகத்திலே உய்வதற்கு வழியில்லாமல் செய்யப்போகும் தற்கொலையைத்தான் அர்ப்பணம் என்று சொல்லுகிறேன்! (காளியைப் பார்த்து) இரத்த வெறி கொண்ட சண்டிகா! உனக்கு இராஜவம்ச இரத்தம் தானே வேண்டும்! நீ பாலூட்டி சீராட்டி வளர்த்து வரும் உன் குழந்தைகள் இரத்தம் தானே வேண்டும் உனக்கு! நானும் இராஜ வம்சத்தில் பிறந்தவன் தான்! என் நரம்புகளில் இராஜ வம்சத்து இரத்தம்தான் ஓடிக் கொண்டிருக்கிறது!. இதோ! எனது கொதிக்கும் இரத்தத்தை வயிறூற குடித்து உன் தாகத்தை தணித்துக் கொள்.

(தன்னையே பலி கொடுக்க கத்தியை ஓங்கும் சமயம் ரோகிணி ஓடிவந்து தடுக்கிறாள்)

ரோகி: சந்திரா.........நில்!......(அவன் கையை பிடித்துக் கொண்டு) தற்கொலைக்கு என்ன அவசியம் வந்து விட்டது? மனித சமூகத்திற்கு நீ என்ன துரோகம் செய்தாய்! (இராஜ குருவைக் காட்டி) இந்த மதவெறியனின் நெஞ்சை கிழிக்க வேண்டிய கத்தி உன் நெஞ்சை நோக்கி பாய்வதா! கேவலம் இந்த கற்சிலையின் பொருட்டு உன் மனிதத் தன்மையை இழந்து விடாதே. இந்த கருங்கல்லை உலக அன்னை என்று இனியும் ஏமாறாதே. இதற்கு காணகண்களுமில்லை. கேட்க செவிகளுமில்லை. உன் கதறல் வான வெளியின் காற்றோடு கலந்து விட்டது. (சந்திரன் கையை பிடித்து இழுத்து) விஞ்ஞான உலகை நிர்மூலமாக்க வந்த இந்த கற்சிலையை, பிறரை ஏமாற்றி பொருள் பறிக்கும், பித்தலாட்டக்காரர்களின் கைப்பாவையான இந்த கருங்கல்லை, மக்கள் இனத்தை பிரித்தாளும் சுயநலக்காரர்களின் வஞ்சக வலையான இந்த கோர கல்லுருவத்தை மறந்து விடு சந்திரா! கலைஞர்களுக்கும், கர்ம வீரர்களுக்கும் உரித்தான

இடத்திலே காளியின் கருங்கல் உருவத்தைக் காட்டி காசு திரட்டும் காரிய வாதிகளையும் மறந்து விடு! புறப்படு என்னுடன்! உளுத்துப்போன உள்ளங் களுக்கு உணர்ச்சியை ஊட்டி புரையோடிப் போன சமூகத்திற்குப் புத்துயிர் அளிக்கப் புறப்படு! அண்டிப் பிழைக்க வந்து ஆட்சி பீடத்தை ஆக்ரமிக்கும் அற்பர்களுக்கு சாட்டையடி கொடுக்கப் புறப்படு! வேதபுராணங்களைக் காட்டி வையகத்தையே ஆட்டி வைக்கும் வெறியர்களை வெட்டி வீழ்த்த புறப் படு! சாஸ்திரங்களைக் காட்டி சமுதாயத்தையே சீரழிக்கும் சாக்கடைப் புழுக்களுக்கு சாவுமணி அடிக்கப் புறப்படு. இந்த புனித செயல்களுக்காக நீ உயிரிழக்க நேரிட்டாலும் நான் வருந்தமாட்டேன். புறப்படு சந்திரா.

சந்தி: ஆம் ரோகிணி ஆம்! நான் கனவிலிருந்து விழித் துக்கொண்டேன்.

ரோகி: இல்லை. சூழ்ச்சிகளிலிருந்து தப்பித்துக்கொண்டேன் என்று சொல்.

சந்தி: என்னை சூழ்ந்திருந்த இருள் விலகிவிட்டது. (கத்தி யை வீசி எறிந்துவிட்டு) வா ரோகிணி. (விரைவாக செல்கிறுன்).

இரா: ......... (இடைமறுத்து) சந்திரா?......

சந்தி: என்னை தடுக்காதீர்கள். அதோ பாருங்கள் வெளி உலகை! ஆண்களோடு பெண்கள் கைகோர்த்து எவ்வளவு உல்லாசமாகச் செல்கிறுர்கள். எனக்கு முன்னுல் நேர்மையான பாதைச் செல்கிறது. காவி உடையை களைந்தெறிந்துவிட்டு வாழ்வளித்த வனி தையுடன் நானும் உல்லாசமாக வழி நடப்பேன். எங்கே துயரங்களும் துன்பங்களும் மறக்கப்படு கின்றனவோ, அங்கே, வாழ்க்கைப் பாதையின்

அந்த புனித முடிவிலே நாம் சேருவோம். வேதங்கள் வகுத்த வழியிலே தாங்கள் செல்லலாம். நான் வருகிறேன்.

(இருவரும் கைகோர்த்து உல்லாசமாக நடக்க)

இரா: (தன்னை மீறிய கோபமுடன்) நயவஞ்சகன்! நன்றிகெட்டவன்! சதி செய்துவிட்டான்! (காளியை பார்த்து) ஏ ஓங்கார காளி! நான் தணிக்கிறேன் உன் தாகத்தை. இரத்தப் பெருக்கெடுத்தோடும் எவ்வளவோ கொலைகளைக் கண்டும் கலங்காத அக்கினி ஜுவாலையைக் கக்கும் என் கொடுங் கண்களா சந்திரனின் இரத்தத்தைக் கண்டு மிரளப்போகிறது! சண்டிகா! சந்திரனையே உனக்கு நர பலி அளிக்கிறேன்.

**(கத்தியேந்தி வேகமாக வெளியேறும் சமயம், ஜீவகன் நிர்மலா, மகேந்திரன், காவலர்கள் பிரவேசம். சந்திரனும் ரோகிணியும் திரும்ப வருகின்றனர்.)**

ஜீவ: இராகுல்! நில்லும். காளிதேவி தங்களுக்கு கற்றுக் கொடுத்திருக்கும் கலைகள் கள்ளும், களவும், கொலையும் சூதும்தானா? உமது வேதங்கள் இதைத் தான் அறிவுறுத்துகிறதா? பிராமணனாகப் பிறந்து இராஜகுரு என்ற பட்டத்தையும் சுமந்துகொண்டு, நெஞ்சில் பூணூலையும் தரித்துக்கொண்டு கொஞ்சமும் அஞ்சாமல் கொலைகளைச் செய்யவும் துணிந்து விட்டீர். யாரங்கே? கைகளில் விலங்கிடு. (இராகுலன் கைகளில் விலங்கு பூட்டப் படுகிறது).

இரா: ஒரு வேண்டுகோள்.

ஜீவ: அவசியமில்லை. விசாரணையும் தேவையில்லை. இழுத்துச் செல்லுங்கள் சிறைச்சாலைக்கு.

(இராஜகுருவை காவலர்கள் அழைத்துச் செல்கிறார்கள்.)

நிர் : தள்ளுங்கள் இருட்டறையில்.

ரோகி : அரசே, வேங்கையின் உள்ளம் கொண்ட வெறியனை வீழ்த்திவிட்டீர்கள். அத்துடன் அவனுக்கு துணையாக நின்ற இந்த கோர விக்ரகத்தையும் தூள் தூளாய் உடைத்தெறிய உத்தரவு அளியுங்கள்.

ஜீவ : ஆத்திரப்படாதே ரோகிணி! அதனால் ஒரு பயனும் அடையப் போவதில்லை. ஒரு காளியை உடைத்தெறிந்தால் ஒன்பது காளிகள் புறப்படலாம். அந்த காளிகளை உருவாக்கும் கலைஞர்களை கட்டுப் படுத்த சட்டமுமில்லை, அது நீதியுமல்ல. (சேனாதிபதியைப் பார்த்து) விக்ரமா! பறை சாற்றச் சொல், மங்களபுரி நாட்டின் எல்லைக்குள்ளிருக்கும் அத்தனை கோயில்களிலும் முக்கால பூஜைகளை நிறுத்த. பக்தியின் பெயரால் ஏற்பட்ட பூஜா வரிசைகள் கோவிலினுள் தடை செய்யப்பட்டிருக்கிறது. விக்ரக ஆராதனை இன்று முதல் நம் நாட்டில் நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால், மகேந்திரா! ...... விக்ரகங்கள் அத்தனையும் பழுது படாமல் பாதுகாக்கப் படவேண்டும். வெளி நாட்டிலிருந்து சிற்ப கலைஞர்களை வரவழைத்து மேலும் சிற்ப கூடங்களை அமைக்க வேண்டும். காளிகளை உருவாக்கிய கலைஞர்களின் கரங்கள் கர்மவீரர்களையும் வீராங்கனைகளையும் விக்ரகமாக சமைக்க வேண்டும். சிற்பங்களை நாட்டின் செல்வமாகக் கொள்ள வேண்டும் ...... .

இன்று முதல் நாட்டிலுள்ள ஒவ்வொரு திருக்கோயிலையும் கலைக் கோயிலாக மாற்றியிருக்கிறோம்.

சந்தி, ரோகிணி : மன்னர் வாழ்க!

(சந்திரனும் ரோகிணியும், கைகோர்த்து அடிவானம் நோக்கி உல்லாசமாகச் செல்கிறார்கள்)

(திரை விழுகிறது.)

---

# PHOTO ART CENTRE

64, Luz Church Road,

MADRAS-4.

★

**AMATURE SERVICE**

**Fine grain developing,**
**Quality printing**
**on variety surface of paper.**

**STUDIO SERVICE**

**Make-up Stills,**
**Groups, and Flash**
**Photoes.**

***Portraits a Speciality.***

35 m.m. films can be processed,
printed and enlarged by Leitz (Leica)
equipment.

*Prop :—*

V. KUDUMBA RAO.


Printed at Jaya & Co. (Paramount Press), Triplicane, Madras-5.

1-A
2-69
295
27-3-58

## எதிர்பாருங்கள் !

குடிதண்ணீருக்கு வாதாட இடம் கொடுத்த சட்டம்

பிடி சோற்றிற்கு வாதாட இடம் விட்டிருக்கிறதா ?

என வெள்ளையனை விரட்டி அடித்த வீரன் —

மண் வெறியர் ஆட்சியிலே மாவீரன் தோன்றக்கூடாதென

சுட்டு வீழ்த்தப்பட்ட வீரன்

# "ஜம்புலிங்கம்"

(தனக்கெனவாழா பிறர்க்குரிமையாளனின்

வரலாற்றுக் கதை)

★

திரைக்கதை வசனம் :

A. G. பால்துரை

## கன்னியா பிலிம்ஸ்

தயாரிப்பு

SCANNED

Printed by Jaya & Co., (Paramonnt Press) Triplicane, Madras-5.